முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி
(கொடைக்கானல் முகாம்)
O.S. No. 829/2015

தேதி : 30.08.2024

(வா.சா.1) – கணேசன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

வாடகை பணம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாடகை பணம் மற்றும் சொத்தும் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். வாடகை கோரிய பரிகாரம் இந்த நீதிமன்றத்தில் நிலைக்கத்தக்கத்தல்ல என்றால் சரியல்ல. அதேபோல் விளம்புகை பரிகாரம் இல்லாமல் சுவாதீனம் மட்டும் கேட்டு தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ன் ஆவணத்தின் சொத்து மதிப்பு என்ன என்றால் ரூ. 1 கோடியே 1 லட்சத்து 60ஆயிரம். சொத்து மதிப்பு அதிகமாக உள்ளதால் இந்த நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 அறிவிப்பு பிரதிவாதி மற்றும் 4 நபர்களுக்கு சேர்த்து அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். லிவினா மேரியை தவிர மற்ற நபர்களை இந்த தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ள 4 நபர்களுக்கும் அறிவிப்பு அனுப்பவேண்டிய அவசியமில்லை என்றும், அந்த 4 நபர்களும் மற்றம் நானும் கூட்டாக சேர்ந்து அந்த அறிவிப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய ஆவணத்திற்கு முந்தைய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணம் என் வசம்தான் உள்ளது. அதை தாக்கல் செய்யாதற்கு காரணம் உள்ளதா என்றால் இல்லை. 12.08.2015ம் தேதி பிரதிவாதியிடம் வாடகை கொடுக்காததால் கால் செய்யவேண்டும் என்று சொல்லியுள்ளதாக பிராதில் சொல்லியுள்ளேன் என்றும், ஆனால் எங்கு வைத்து எப்போது கேட்டேன் என்று பிராதில் சொல்லவில்லை என்றால்சரிதான். நான் கோரியுள்ள பரிகாரம் நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்படதக்கது என்றால் சரியல்ல.

ஒம்.K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.